MGS – PAPERR 1

**605 / 7**

தொடக்கநிலை 6

மாதிரி தேர்வுத்தாள்



பெயர் : ______________________

வகுப்பு : ______________________

தேதி : ______________________

/ 90




பெற்றோர் கையொப்பம் : ______________________



More papers at www.testpapersfree.com

More papers at www.testpapersfree.com

A1 வேற்றுமை

**Q1 முதல் Q5 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான வேற்றுமை உருபு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (10 மதிப்பெண்கள்)**

Q1. காலையில் பள்ளிக்குச் சென்ற பாலன் தமிழ் ஆசிரியரை கண்டதும் தன் ____________________ தெரிவித்தான்.

(1) வணக்கத்துக்கு
(2) வணக்கம்
(3) வணக்கத்தை
(4) வணக்கத்தோடு ( )

Q2. அப்பாவின் ____________ இணங்கி இராமன் தன் தம்பியோடு கானகம் சென்றான்.

(1) கட்டளையால்
(2) கட்டளையை
(3) கட்டளைக்கு
(4) கட்டளையில் ( )

Q3. சிங்கத்தின் _______________ தப்பிய மான் வேடன் விரித்திருந்த வலையில் சிக்கி தவித்தது.

(1) பிடிக்கு
(2) பிடியை
(3) பிடியில்
(4) பிடியிலிருந்து ( )

Q4. சுனாமி பேரலைக்குப் பலியான தங்களது ஊர் _________________ மண்ணாகிவிட்டதைப் பார்த்த மக்கள் அழுது புரண்டனர்.

(1) மண்ணோடு
(2) மண்ணுக்கு
(3) மண்ணால்
(4) மண்ணிலிருந்து ( )

Q5. அறுசுவை ______________ மணமும் ருசியும், உணவு விழாவுக்கு வந்திருந்தோரின் ஆவலை மேலும் தூண்டியது.

(1) உணவிலிருந்து
(2) உணவுக்கு
(3) உணவின்
(4) உணவில் ( )



More papers at www.testpapersfree.com

A2 செய்யுள் / பழமொழி

**Q6 முதல் Q10 வரையுள்ள செய்யுள் / பழமொழியை நிறைவு செய்வதற்கு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர் OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு.** **(10 மதிப்பெண்கள்)**

Q6. மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் ____________.

(1) அரும்பு
(2) கரும்பு
(3) மருந்து
(4) விருந்து ( )

Q7. உடையவன் ________________ வேலை ஒரு முழம் கட்டை.

(1) பாராத
(2) பார்க்காத
(3) செய்யாத
(4) முடிக்காத ( )

Q8. நல்லவன் என்று _____________ எடுக்க நாள் செல்லும்.

(1) பட்டம்
(2) புகழ்
(3) பேர்
(4) பெயர் ( )

Q9. _____________________ காக்கின் சினங்காக்க காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம்.

(1) உன்னைத்தான்
(2) தன்னைத்தான்
(3) நினைத்தான்
(4) என்னைத்தான் ( )

Q10. தேடாது அழிக்கின் பாடாய் ____________.

(1) விடியும்
(2) தெரியும்
(3) அறியும்
(4) முடியும் ( )



More papers at www.testpapersfree.com

**A3 அடைமொழி / எச்சம்**

**Q11 முதல் Q15 வரையுள்ள அடைமொழி / எச்சத்தை நிறைவு செய்வதற்கு ஏற்ற மிகப் பொருத்தமான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில் அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (10 மதிப்பெண்கள்)**

Q11. ஆற்றில் குதித்து சிறுவனைக் ______________ கோபாலை அனைவரும் பாராட்டினர்.

(1) காப்பாற்றும்
(2) காப்பாற்றிய
(3) காப்பாற்றுகிற
(4) காப்பாற்றி ( )

Q12. தாஜ்மஹாலின் ______________ வேலைப்பாடுகளைக் கண்ட சுற்றுப்பயணிகள் அதிசயித்து நின்றனர்.

(1) அழகாக
(2) அழகு
(3) அழகிய
(4) அழகாய் ( )

Q13. முக்கனிகளில் ஒன்றான மாம்பழம் மக்களால் ____________ உண்ணப்படுகிறது.

(1) விருப்பம்
(2) விருப்பமான
(3) விரும்ப
(4) விரும்பி ( )

Q14. சோர்வால் மயங்கி _____________ முதியவருக்கு வழிப்போக்கர்கள் முதலுதவி சிகிச்சை அளித்தனர்.

(1) விழும்
(2) விழுந்த
(3) விழுகிற
(4) விழுந்தால் ( )

Q15. __________________ காடுகளில் புலி, கரடி போன்ற கொடிய மிருகங்கள் வாழும்.

(1) அடர்ந்த
(2) அடர்ந்து
(3) அடர்த்திய
(4) அடர்த்தி ( )



More papers at www.testpapersfree.com

<u>A 4 முன்னுணர்வுக் கருத்தறிதல்</u>

**Q16 முதல் Q20 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (10 மதிப்பெண்கள்)**

அன்று சனிக்கிழமை. ரவி தன் அறையில் அமர்ந்து பாடங்களை படித்துக்கொண்டிருந்தான். அப்போது ஒரு குளவி அவனை **Q16** _______________ ரீங்காரமிட்டது. குளவி தன்னைக் கொட்டிவிடுமோ என்று ரவி **Q17** _______________. அவன் பயப்படுவதைக் கண்ட குளவி கர்வம் கொண்டது.

இதை ஓர் எறும்பு கவனித்தது. அது குளவியின் அருகில் சென்று, " குளவியே! நீ ஏன் அந்தச் சிறுவனை வட்டமிடுகிறாய்? மனிதர்களை தவறாக எடை போடாதே! அதனால் **Q18** _____________ நடந்துகொள் ," என்று எச்சரித்தது. ஆனால், குளவி எறும்பின் எச்சரிக்கையைப் பொருட்படுத்தவில்லை. அது மீண்டும் ரவியை வட்டமிட்டு ரீங்காரமிட்டது.
ரவி **Q19** _______________ அடைந்தான். அவன், " குளவியே ! இன்று உனக்கு போதாத காலம்," என்று கூறி ஓர் அட்டையை எடுத்து அதன்மீது
**Q20** _______________. குளவி அந்தத் தாக்குதலைச் சமாளிக்க முடியாமல் கிழே விழுந்து மடிந்தது. எறும்பு குளவியின் பரிதாப நிலையைக் கண்டு அங்கிருந்து அகன்றது.

Q16. (1) தேடி
(2) நாடி
(3) சுற்றி
(4) துரத்தி ( )

Q17. (1) நின்றான்
(2) வேறுதான்
(3) அஞ்சினான்
(4) திகைத்தான் ( )

Q18. (1) கவனமாக
(2) பயபக்தியாக
(3) மரியாதையாக
(4) எச்சரிக்கையாக ( )



More papers at www.testpapersfree.com

Q19. (1) பயம்
(2) துன்பம்
(3) எரிச்சல்
(4) வேதனை ( )

Q20. (1) விசிறினான்
(2) மூடினான்
(3) அடித்தான்
(4) விரட்டினான் ( )



More papers at www.testpapersfree.com

**<u>B5 தெரிவுவிடைக் கருத்தறிதல்</u>**
**பின்வரும் பகுதியை கருத்தூன்றிப் படி.**

ஒருமுறை அக்பரும் பீர்பாலும் உரையாடிக் கொண்டிருந்தபோது, பணத்திற்காக மனிதன் எதையும் செய்யக்கூடியவன் என்று பீர்பால் கூறினார். பீர்பாலின் கூற்றை ஏற்றுக்கொள்ளாத அக்பர், " குளிர் மிகுந்த குளத்தில் ஒருவன் பணத்திற்காக இரவு முழுவதும் நிற்பானா?" எனக் கேட்டார். " நிற்பான்!" என பீர்பால் **<u>திண்ணமாகக்</u>** கூறினார். அப்படி ஒருவன் குளத்தில் நின்றுவிட்டால் தான் ஆயிரம் தங்கக் காசுகளைக் தருவதாக கூறினார் அக்பர். செய்தியைக் கேட்ட ஓர் ஏழை, குளத்தில் நிற்பதற்கு முன் வந்தான். குளத்தைச் சுற்றிலும் காவலாளிகள் நிறுத்தப்பட்டனர்.

அந்தத் கடுங்குளிரில், அந்த ஏழை இரவு முழுவதையும் குளத்தில் கழித்தான். மறுநாள் காலை அக்பர், " நடுங்கும் குளிரில் எப்படி நீரில் நின்றாய் ?" என வினவினார். அவன், தூரத்தில் தெரிந்த விளக்கின் ஒளியை பார்த்துக்கொண்டே நின்றதாக கூறினான். அதற்கு அக்பர், அந்த விளக்கு கொடுத்த **<u>வெப்பத்தால்</u>** தான் அவனால் குளிரில் நிற்க முடிந்தது எனக் கூறி வெகுமதியில்லாமலே ஏழையை அனுப்பினார். அவன் பீர்பாலிடம் சென்று பரிதாபத்தோடு நடந்தவற்றைக் கூறினான். " வருந்தாதே , உனக்கு **<u>வெகுமதி</u>** கிடைக்க வழி செய்கிறேன், " என்றார் பீர்பால்.

மறுநாள் அக்பர் பீர்பாலைக் காண அவர் வீட்டுக்குச் சென்றார் . அங்கே அவர் கண்ட கட்சி அக்பரை **<u>வியப்பில்</u>** ஆழ்த்தியது. பத்து அடி உயரம் உள்ள இரண்டு கம்புகள் நடப்பட்டு, அதன் குறுக்கே ஒரு பாத்திரம் உறிப்போல் கட்டித் தொங்க விட்டு இருந்தது. அதன் கிழே நெருப்பு மூட்டி விசிறிக் கொண்டு இருந்தார் பீர்பால்.

அக்பர், " உமக்கு என்ன பைத்தியமா? நெருப்புக்கும் பானைக்கும் இவ்வளவு தூரம் உள்ளதே . சூடு எப்படி உண்டாகும்? அரிசி எப்படி வேகும்?" என்றார். பீர்பால் அதற்கு, " தூரத்தில் தெரியும் விளக்கின் வெப்பம் குளத்தில் நிற்பவனுக்கு கிடைக்கும் போது , பத்து அடி தூரமே உள்ள இந்த பானைக்கு ஏன் கிடைக்காது?" எனக் கேட்டார். இதைக் கேட்ட அக்பர், பீர்பாலின் புத்திக்கூர்மையை **<u>மெச்சி</u>** , " சரி புறப்படு, நீயே உன் கையால் அந்த ஏழைக்கு வெகுமதியைக் கொடு, " என்றார்.

**Q21 முதல் Q24 வரையுள்ள வினாக்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியையொட்டி அமைத்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கு உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில் அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (10 மதிப்பெண்கள்)**



More papers at www.testpapersfree.com

Q21. அக்பர் பீர்பாலின் கூற்றை மறுத்ததற்குக் காரணம் என்ன?

(1) அக்பருக்கு பீர்பாலைப் பிடிக்காததால்
(2) மனிதன் பணத்திற்காக எதையும் செய்வான் என்று நம்பாததால்
(3) எவனும் கடுங்குளிரை தாங்கி கொள்ள மாட்டான் என்பதால்
(4) பீர்பால் சொன்னது பொய் என்று கருதியதால் ( )

Q22. ஏழை எதற்காக அக்பரின் சவாலை ஏற்றுக் கொண்டார்?

(1) தான் குளிரில் நிற்க முடியும் என நினைத்ததால்
(2) பீர்பால் அந்த ஏழையைக் கட்டாயப்படுத்தியதால்
(3) விளக்கின் ஒளியைக் பார்க்க முடியும் என்பதால்
(4) ஆயிரம் தங்கக் காசுகள் கிடைக்கும் என்பதால் ( )

Q23. ஏழை இரவு முழுதும் குளத்தில் நின்றதற்கு எது காரணமாய் இருந்தது என்று கூறினான்?

(1) அக்பர் இட்ட கட்டளை
(2) சுற்றியிருந்த காவல்
(3) விளக்கின் ஒளி
(4) ஏழையின் பலம் ( )

Q24. பீர்பால் அடுத்த நாள் ஏன் அரண்மனைக்குப் போகவில்லை?

(1) அக்பர் செய்த தவற்றை சுட்டிக்காட்ட விரும்பியதால்
(2) அவர் இன்னும் உணவு உண்ணவில்லை என்பதால்
(3) அவர் ஏழைக்கு உதவியதால்
(4) அவருக்கு அக்பரின் மீது கோபம் இருந்ததால் ( )

<u>சொற்பொருள்</u>

**வினா Q25 இல் இடம்பெற்றுள்ள சொல்லின் பொருளை உணர்த்தும் சரியான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (2 மதிப்பெண்கள்)**

Q25. திண்ணமாக

(1) குழப்பமாக
(2) ஐயத்தோடு
(3) குறிப்பாக
(4) உறுதியாக ( )



More papers at www.testpapersfree.com

**C6 ஒலி வேறுபாட்டுச் சொற்கள்**

பின்வரும் பகுதியில் Q26 முதல் Q29 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு பொருத்தமான ஒலி வேறுபட்டுச் சொற்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கு ஏற்ற மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. (8 மதிப்பெண்கள்)

| | | |
|---|---|---|
| Q26. | தீபாவளி பண்டிகை நெருங்கிக்கொண்டிருந்தது. அதனால் தெருவெங்கும் திருவிழா ______________ பூண்டிருந்தது. | Q26 ( ) |
| Q27. | தர்வீன் கோழிகளுக்கு ______________ போட்டாள். கோழிகள் அவற்றைத் கொத்தி கொத்தி தின்னும் அழகை கண்டு ரசித்தாள். | Q27 ( ) |
| Q28. | கலா நடன ______________ கலையை கற்க விரும்பினாள். அதனால் அவளுடைய தாயார் அவளை நடன வகுப்பில் சேர்த்துவிட்டார். | Q28 ( ) |
| Q29 | வேடன் வேட்டையாடக் காட்டுக்குச் சென்றான். அங்கு அவன் தொடுத்த ______________ ஒரு மானைக் கொன்றது. | Q29 ( ) |


| | |
|---|---|
| (1) கோலம் | (1) கலையை |
| (2) கனை | (2) இரை |
| (3) களையை | (3) கோளம் |
| (4) இறை | (4) கணை |





More papers at www.testpapersfree.com

**D7 கருத்து விளக்கப்படக் கருத்தறிதல்**

**சிறுவர் தினக் கொண்டாட்டம்**







நாள் : 19 நவம்பர் 2016

இடம் : பெர்மாய் சமூக மன்றம்

நேரம் : மாலை மணி 6 முதல்

இரவு மணி 9 வரை

**ஏற்பாட்டாளர் : சின்வா சமூக மன்ற இந்திய நற்பணிக்குழு**

**சிறப்பு விருந்தினர்**

- பிரபல காற்பந்து விளையாட்டாளர் திரு சுந்தரமூர்த்தி.
- சிறப்பு விருந்தினருடன் கட்டணமின்றிப் புகைப்படம் எடுத்துக்கொள்ளலாம்
- வருகை புரிவோர் அனைவருக்கும் சிற்றுண்டியும் பலூன்களும் வழங்கப்படும்

**சிறுவர்களுக்கான சிறப்பு அம்சம்**

- சிறுவர்களுக்கான கதை / கட்டுரை போட்டிகளும் உண்டு.
- வெற்றியாளருக்குக் கவர்ச்சிகரமான பரிசுகள் காத்திருக்கின்றன.

**நீங்கள் செய்ய வேண்டியவை**

- சிறுவர் தினத்தைப் பற்றி ஒரு கவிதை அல்லது கட்டுரை எழுதி ஆகஸ்ட் 10 - ஆம் தேதிக்குள் ஏற்பாட்டுக்கு குழுவினருக்கு அனுப்பி வைக்க வேண்டும்.
- 

**சிறுவர் தினத்தை இன்றே கொண்டாடுவோம்!!!**

**அனைவரும் வருக.**



More papers at www.testpapersfree.com

**Q30 முதல் Q33 வரை இடம்பெற்றுள்ள வினாக்கள் முன்பக்கத்தில் தரப்பட்டுள்ள விளம்பரத்தை அடிப்படையாக கொண்டு அமைத்துள்ளன. ஒவ்வொரு தெரிவுவிடை வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. சுயவிடை வினாவிற்கு விளம்பரத்திலிருந்து விடையை கண்டறிந்து எழுது. (10 மதிப்பெண்கள்)**

Q30. சிறுவர் தினக் கொண்டாட்டத்தின் ஏற்பாட்டாளர் யார்?

(1) சிறுவர் நற்பணிக்குழு
(2) பெர்மாய் நற்பணிக்குழு
(3) சுந்தரமூர்த்தி நற்பணிக்குழு
(4) சின்வா இந்திய நற்பணி குழு ( )

Q31. சிறப்பு விருந்தினரைக் காண விரும்புவோர் என்ன செய்ய வேண்டும்?

(1) நிகழ்ச்சிக்கு வர வேண்டும்
(2) நிகழ்ச்சிக்குப் பதிவு செய்ய வேண்டும்
(3) நிகழ்ச்சிக்குக் கட்டுரை எழுத வேண்டும்
(4) நிகழ்ச்சி ஏற்பாட்டுக் குழுவுடன் தொடர்பு கொள்ள வேண்டும் ( )

Q32. இந்த நிகழ்ச்சியின் சிறப்பு அம்சம் என்ன?

(1) இலவச சிற்றுண்டி
(2) கதை கட்டுரை போட்டிகள்
(3) சிறப்பு விருந்தினருடன் புகைப்படம் எடுப்பது
(4) பலூன் செய்யும் போட்டி ( )

Q33. போட்டியில் பரிசு பெற விரும்புவோர் எவற்றை எல்லாம் கருத்தில் கொள்ள வேண்டும்? (4 மதிப்பெண்கள்)

______________________________
______________________________
______________________________
______________________________
______________________________
______________________________
______________________________
______________________________
______________________________



More papers at www.testpapersfree.com

**D8 சுயவிடை கருத்தரித்தல்**

**பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்துன்றிப் படி.**

அன்று அருணும் தருணம் உற்சாக வெள்ளத்தில் மிதந்துகொண்டிருந்தனர். அன்றுதான் அவ்விருவரின் பள்ளிக்கூட திடலில் பள்ளிகளுக்கிடையேயான கூடைப்பந்தாட்ட இறுதிப்போட்டி நடைபெற இருந்தது. சகோதரர்களான அருணும் தருணம் தங்கள் பள்ளியைப் பிரதிநிதித்துப் பங்கேற்க இருந்தார்கள். இருவரும் காலை உணவை உண்டுவிட்டு பள்ளியை நோக்கிச் சிட்டாய்ப் பறந்தனர். அருணும் தருணம் பள்ளியை அடைந்தனர். சகோதரர்கள் இருவரும் தங்கள் விளையாட்டு உடைகளை அணிந்துகொண்டு தங்கள் குழுவினரோடு திடலில் நின்றனர். இன்னும் சற்று நேரத்தில் இறுதிப்போட்டி தொடங்க் இருந்தது. அனைவரும் ஆவலோடு கடிகாரத்தைப் பார்த்திருந்தனர். எதிர்பார்த்த வேளையும் வந்தது.

போட்டி தொடங்கியது. கூடைப்பந்தாட்டத்தை இரு குழுக்களும் மிகச் சிறப்பாக விளையாடிக்கொண்டிருந்தன. இரு தரப்பு விளையாட்டாளர்களும் கூடைப்பந்தை அங்கும் இங்கும் வீசிக்கொண்டிருந்தனர். பார்வையாளர்கள் ஆரவாரத்துடன் விளையாட்டை ரசித்துக்கொண்டிருந்தனர். அப்போது, திடீரென்று, "ஐயோ அம்மா" என்ற அலறல் சத்தம் கேட்டது. எல்லாரும் ஒரு கணம் விளையாட்டை நிறுத்திவிட்டு சத்தம் வந்த திசையை நோக்கினர். திடலில் அருண் தன் வலது கையைப் பிடித்துக்கொண்டு வலியால் துடித்துக்கொண்டிருந்தான். அருணின் குழுவினரும் பள்ளி ஆசிரியரும் அவனிடம் சென்றனர். அருணின் கை எலும்பு முறிந்து இருந்தது. அவனால் தன் கையைத் தூக்க முடியவில்லை. உடனே ஆசிரியர் அருணை பள்ளியின் முதலுதவி அறைக்குத் தூக்கிச் சென்றார். அங்கே அருணுக்கு அவசரத் சிகிச்சை அளிக்கப்பட்டது. பிறகு அவன் கையில் கட்டுப் போடப்பட்டது.

அதே வேளையில் திடலில் விளையாடிக்கொண்டிருந்த அருணின் குழுவினர் தோல்வி அடைந்தனர். இதற்கு காரணம் அக்குழுவில் அருணே சிறந்த விளையாட்டாளன் என்பதே ஆகும். அருண் குழுவிலிருந்து பாதியில் விலகியதால், இறுதியில் அக்குழு தோல்வியுற்றது. ஆனால், அவர்கள் அதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளாமல் உடனே அருணைக் காணச் சென்றனர்.



More papers at www.testpapersfree.com

முதலுதவி அறையில் அருண் தேம்பித் தேம்பி அழுதுகொண்டிருந்தான். "என்னால்தானே நம் குழு தோல்வியடைந்தது. என்னை மன்னியுங்கள், " எனக் கூறினான். இதைக் கேட்ட மற்ற மாணவர்கள், " எங்களுக்கு அதைபற்றிக் கவலையில்லை. உனது கை அடிபட்டுவிட்டதே என்பதுதான் எங்களுக்கு வேதனையை அளிக்கிறது," என்று கூறினர். இவற்றையெல்லாம் கவனித்த ஆசிரியர், " நம் பள்ளி மாணவர்கள் இவ்வளவு ஒற்றுமையாக இருக்கிறார்களே!" என்றெண்ணிப் பெருமையடைந்தார்.

**Q34 முதல் Q40 வரையுள்ள வினாக்களுக்கு மேற்கண்ட பகுதியிலிருந்து விடைகளைக் கண்டறிந்து எழுது. ( 22 மதிப்பெண்கள் )**

Q34. அருணும் தருணும் ஏன் உற்சாகமாக இருந்தனர்? ( 3 மதிப்பெண்கள் )

____________________________________________________________

Q35. சகோதரர்கள் பள்ளிக்குச் சென்றதும் என்ன செய்தனர்? (2 மதிப்பெண்கள் )

____________________________________________________________

Q36. திடலில் அருணுடைய குழுவினரும் அருணை நோக்கி ஓடியதன் காரணம் என்ன ? ( 4 மதிப்பெண்கள் )

____________________________________________________________



More papers at www.testpapersfree.com

Q37. அருணுடைய குழுவினரின் தோல்வி எதனால் ஏற்பட்டது? (3 மதிப்பெண்கள்)

Q38. மருத்துவ அறையில் ஏன் அருண் அழுதுகொண்டிருந்தான்?
(2 மதிப்பெண்கள் )

Q39. மாணவர்களின் எந்தச் செயல் ஆசிரியரைப் பெருமை அடைய வைத்தது?
( 4 மதிப்பெண்கள் )

Q40. அருணின் குழுவினர் போட்டியில் ஏன் தோல்வியுற்றனர் என்பதை விளக்கி நீ உன் நண்பனுக்குக் குறிப்பு எழுது. (4 மதிப்பெண்கள் )



More papers at www.testpapersfree.com

MGS – PAPERR 1





MGS – PAPER 1

More papers at www.testpapersfree.com

# MGS PAPER 1

## தொடக்க நிலை 6

வி1) 3

வி2) 3

வி3) 4

வி4) 1

வி5) 3

வி6) 4

வி7) 1

வி8) 4

வி9) 2

வி10) 4

வி11) 2

வி12) 3

வி13) 4

வி14) 2

வி15) 1

வி16) 3

வி17) 3

வி18) 1

வி19) 3

வி20) 3

வி21) 2

வி22) 4

வி23) 3

வி24) 1

வி25) 4

வி26) 1

வி27) 2

வி28) 1

வி29) 4

வி30) 4

வி31) 3

வி32) –

More papers at www.testpapersfree.com

More papers at www.testpapersfree.com

33) போட்டியில் பரிசு பெற விரும்புவோர் சிறுவர் தினத்தை பற்றி ஒரு கவிதை அல்லது கட்டுரை எழுதி ஆகஸ்ட் 10-ஆம் தேதிக்கு ஏற்பாட்டு குழுவினருக்கு அனுப்பி வைக்க வேண்டும். மேலும் 19 நவம்பர், பெர்மாய் சமூக மன்றத்திற்கு மாலை 6 மணிக்குச் செல்ல வேண்டும். இவற்றை எல்லாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

D8 சுயவிடை கருத்தறிதல்

34) அன்றைய தினம் அருணும் தருணும் அவர்கள் பள்ளிக்கூட திடலில் நடக்கும் பள்ளிகளுக்கிடையேயான கூடைப்பந்தாட்ட இறுதிப்போட்டியில் தங்கள் பள்ளியை பிரதிநிதித்துப் பங்கேற்க இருப்பதால் உற்சாகமாக இருந்தனர்.

35) சகோதரர்கள் பள்ளிக்குச் சென்றதும் அவர்களது விளையாட்டு உடைகளை அணிந்துக் கொண்டு அவர்களது குழுவினரோடு திடலில் நின்றனர்.

More papers at www.testpapersfree.com

More papers at www.testpapersfree.com

36) அருண் திடீரென்று தன் வலது கையைப் பிடித்துக் கொண்டு 'ஐயோ அம்மா' என அலறியவாறு வலியால் துடித்தான். இதன் காரணமாகவே திடலில் இருந்த அருணுடைய குழுவினர் அவனை நோக்கி ஓடினர்.

37) அருணே அக்குழுவின் சிறந்த விளையாட்டாளர் ஆவான். அவன் பாதியில் விலகியதால், அவனுடைய குழுவினருக்கு தோல்வி ஏற்பட்டது.

38) தன்னால் தான் தமது குழு தோல்வியடைந்தது என்ற காரணத்தால் மருத்துவ அறையில் அருண் அழுதுக்கொண்டிருந்தான்.

39) மாணவர்கள் தங்கள் தோல்வியை பற்றி எண்ணாமல், தமது நண்பனின் கை அடிபட்டு விட்டதை எண்ணி வேதனை அடைந்தனர். அவர்களின் இச்செயல் ஆசிரியரை பெருமை அடைய வைத்தது.

More papers at www.testpapersfree.com

More papers at www.testpapersfree.com